**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 09/2021**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சதீஸ்குமார் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அசல் ஆவணத்தை என்ன காரணத்தால் தாக்கல் செய்யவில்லை என்றால் வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன். பி.சா.ஆ.1 ஆவணம் எப்போது ஏற்படுத்தினோம் என்றால் 2025 ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் எவ்வளவு கிரைய தொகை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.15,000/–. மேற்படி தொகையை ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் எழுதப்பட்ட போது 1 ம் பிரதிவாதியிடம் அசல் பட்டா இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி பட்டா தற்போது யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் உள்ளது. எனது கிரைய ஆவணத்தில் அசல் பட்டாவை இணைத்துள்ளேனா என்றால் ஆமாம்.

2) பி.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதினார் என்றால் ராமச்சந்திரன் எழுதியுள்ளார். மேற்படி ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் குமார், சுகந்தி இருவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி சாட்சிகள் இருவரும் கழுகூர் கிராமத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 சிவகுரு பெயரில் வழங்கப்பட்ட அசல் பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டா தாவா ஏ ஷெட்யூலுக்கு உரியதா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–5 செல்லம்மாள் பெயரில் உள்ள அசல் பட்டா என்றால் சரிதான். அது தாவா பி அயிட்ட சொத்திற்கு உரியது என்றால் சரிதான்.

3) மேற்படி ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். அசல் பட்டாவானது வாதி வசம் இருக்கும் போது நான் கிரையம் செய்த போது என்ன பட்டா கொடுத்தார்கள் என்றால் என்னிடமும் அசல் பட்டா தான் உள்ளது. அசல் பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பி.சா.ஆ.2 தான் நான் தாக்கல் செய்துள்ள அசல் பட்டாவா என்றால் ஆமாம். மேற்படி பட்டா எப்போது வழங்கப்பட்டுள்ளது என்றால் 07.08.2020 ல் வழங்கப்பட்டது. வா.சா.ஆ.5 1994 ம் வருடம் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

4) 1ம் பிரதிவாதி அசல் பட்டாவை வாதியிடம் கொடுத்ததை என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. வாதிக்கு வழக்கு பி அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்த விபரத்தை சொன்னாரா என்றால் இல்லை. அவ்வாறு அவர் விற்பனை செய்யவில்லை. வாதிக்கு தாவா பி அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி ரூ.5,000/- பணம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கும், சாட்சிகளுக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ளது செல்லம்மாள் கையெழுத்தா என்றால் அவ்வாறு தான் உள்ளது. மேற்படி கையெழுத்து குறித்து செல்லம்மாளை விசாரணை செய்தால் தெரியும் என்றால் சரிதான். அவரை விசாரிக்கிறாரா என்றால் விசாரிக்கிறேன்.

5) வா.சா.ஆ-4ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ள கருப்பண்ணன், கந்தசாமியை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கந்தசாமி இவ்வழக்கில் சாட்சி சொன்ன விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.3 தியாகராஜனை தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது மாகாளிபட்டியில் குடியிருக்கிறேன். தாவா சொத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அருகிலேயே உள்ளது. தாவா சொத்து நான் குடியிருக்கும் வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை.

6) தாவா சொத்திற்கு மேற்கே வண்டிப்பாதை உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு வடபுறம் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்தில் என்ன வீடு உள்ளது என்றால் ஆஸ்பெட்டாஸ் வீடு உள்ளது. அதை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் கிரையம் வாங்கும் போது வீடு இருந்ததா என்றால் ஆஸ்பெட்டாஸ் வீடு இருந்தது. பி.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விபரத்தில் வீடு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை காலிமனை என்று தான் உள்ளது. இருந்த வீட்டை மறைத்து தான் நான் கிரையம் பெற்றேனா என்றால் இல்லை. நான் வாங்கி தான் வீடு கட்டினேன். வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை.

7) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இடம் தான் வழக்கு சொத்தா என்றால் ஆமாம். மேற்படி புகைப்படம் மற்றும் பென்ரேவ் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகைப்படத்தில் பெட்டி கடை உள்ளதா என்றால் அது வேறு நிலத்தில் உள்ளது. புகைப்படத்தில் உள்ள வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகைப்படத்தில் உள்ள வீடு மற்றும்

கடை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டதா என்றால் இல்லை. மேற்படி புகைப்படத்தில் உள்ள பெட்டி கடை தான் தாவா பி அயிட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதி 1ம் பிரதிவாதியிடம் பி அயிட்ட சொத்தை கிரையம் வாங்கி விட்டு பெட்டி கடை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை நிரூபிக்க தான் ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) நான் தாவா சொத்தில் கட்டியதாக சொல்லியுள்ள வீட்டிற்கு வரி இரசீது உள்ளதா என்றால் உள்ளது. பி.சா.ஆ.5 தான் என்னுடைய வரி இரசீதா என்றால் ஆமாம். மேற்படி இரசீது 2014 மற்றும் 2015 ஆகிய வருடத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் ரசீது 2015ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 3ம் ரசீது 2024 – 2025 வருடத்திற்கு உரியது என்றால் சரிதான். 3 இரசீதுகளில் வரி விதிப்பு எண்.185 என்றால் சரிதான். மேற்படி இரசீதின் அடிப்படையில் நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா பி அயிட்ட சொத்திற்கு என் பெயரில் வரி ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பே எவ்வாறு என் பெயரில் வரி ஏற்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி என்னுடன் தான் வசித்து வந்தார். என்னுடன் இருந்ததால் என் பெயரில் வரி இரசீதை மாற்றி காலியிடம் என வீட்டை மறைத்து கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9) தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள முனையம்பட்டி செல்லும் ரோட்டின் சுமார் 100 அடி தொலைவில் எனக்கு ஒரு வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டிற்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி இரசீதை தான் தாவா சொத்திற்கு உரியது என பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. அசல் பட்டா வாதியிடம் உள்ளதை தெரிந்து கொண்டு பி.சா.ஆ.3 பட்டாவை பொய்யாக தயார் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 மின் கட்டண இரசீதுகள் தாவா சொத்திற்கு உரியதல்ல என்றும் எனது மற்றொரு வீட்டிற்கு உரியது என்றால் சரியல்ல.

10) தாவா சொத்து தற்போது வரை வாதியின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ள விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்தில் உள்ள பெட்டி கடைக்கு வாதி கழுகூர் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று கடைக்கு வரி செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.11 புகைப்படத்தில் உள்ள வீடும், கடையும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் அதன் கதவு எண் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதிக்கு எதிராக கரூர் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு கிரையம்

செய்து கொடுத்ததற்கு பின்னிட்டு புகார் கொடுத்தார். அந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புகாரில் கண்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

11) நான் மேற்படி நிலத்தில் கிரையம் பெற்ற பின்னிட்டு 1ம் பிரதிவாதி எவ்வாறு புகார் கொடுத்தார் என்றால் சாட்சி புகாரை 1ம் பிரதிவாதி கொடுத்தாரா அல்லது நான் கொடுத்தேனா என ஞாபகம் இல்லை என கூறினார். நில அபகரிப்பு பிரிவில் வாதியை பொது அதிகார முகவர் ரவிச்சந்திரன் விசாரிக்கப்பட்டாரா என்றால் ஆமாம். செல்லம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த பின்னிட்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என பொது அதிகார முகவர் விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. விசாரணையில் இந்த பிரச்சனை உரிமையியல் சம்பந்தப்பட்டது என்பதால் நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் தேடிக்கொள்ள சொன்னார்களா என்றால் இல்லை. வாதி தாவா இடத்தை விட்டுவிடுவதாக கூறி எழுதிக்கொடுத்து விட்டு வந்தார். அந்த அடிப்படையில் புகார் முடிக்கப்பட்டது.

12) வாதி அவ்வாறு எழுதி கொடுத்ததை நான் ஏற்றுக்கொண்டேனா என்றால் ஆமாம். புகார் கொடுத்த போதும், விசாரணை நடந்த போதும் வாதி தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்தாரா என்றால் இல்லை நான் தான் இருந்தேன். நான் சுவாதீனத்தில் உள்ள நிலையில் வாதி வெளியேறி கொள்வதாக கூற வேண்டிய அவசியம் என்ன என்றால் வாதி என்னிடம் பிரச்சனை செய்ய மாட்டேன் என கூறினார். நான் மோசடியாக செல்லம்மாளிடமிருந்து கிரையம் எழுதி வாங்கி கொண்டு அதில் இருந்து தப்பிக்க வாதி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) தாவா சொத்திற்கு கிழக்கே சர்வே எண்.962/23 உள்ளதா என்றால் உள்ளது. அந்த நிலத்திற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் என் பெயரில் உள்ளது. அந்த இடம் காலியாக உள்ளதா என்றால் வீடு உள்ளது. அந்த வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடம் காலியாக உள்ளதா என்றால் காலியாக உள்ளதால் தான் எனக்கு கதவு எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. 26.12.2020ல் நானும் மற்ற பிரதிவாதிகளும் எங்கள் இடத்தை பார்வையிடுவது போல வந்து தாவா சொத்திலும், வாதி குடியிருப்புக்கு இடையூறு செய்யும் முயற்சியில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல.

14) தொடர்ந்து வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதால் தான் சட்டப்பரிகாரம் வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் நியாயமான கோரிக்கைக்கு எதிராக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொன்ன தேதியில்

சொல்லப்பட்ட நபரால் கிரைய ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தைப் பொறுத்து எனக்கு உரிமை ஏதும் இல்லாததால் நான் கேட்டுள்ள எதிர் கோரிக்கை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கு தீர்ப்பாக வேண்டுமென்றும், எனது எதிர் கோரிக்கை மனுவும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. ஏற்கனவே வாதிக்கு 1ம் பிரதிவாதி சொத்தை விற்று விட்டதால் அவர் எனக்கு விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட கிரைய ஆவணம் பதிவு செய்யப்படாததை பயன்படுத்தி பொய்யாக எதிர் வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**